<u>**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**</u>
<u>**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**</u>
<u>**MCOP . No.213/2025**</u>

எ.ம.சா.2 திரு.எஸ்.மணி த/பெ சேட்டு நாள் : 16.07.2026

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது குரிசிலாப்பட்டு காவல்நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். புகார் நகலை கொண்டு வந்துள்ளேனா என்றால் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டதால் எங்கள் கோப்புகளில் இல்லை. உதயா ஓட்டி சென்றதாக புகாரில் கொடுக்கப்பட்டுள்ளது. தன் மகன் தினேஷ்குமார் ஓட்டி சென்றதாக கோவிந்தராஜ் புகார் கொடுக்கப்படவில்லை. இறுதி அறிக்கையில் தினேஷ்குமார் டிரக்டரை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதாக அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தினேஷ்குமார் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து தமிழரசன் வீட்டின் மண் திட்டின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டதில் அவர் கீழே விழுந்து டிரக்டருக்கு அடியில் மாட்டிக் கொண்டார் என்று உள்ளது என்றால் சரிதான். உதயா டிரக்டரை ஓட்டிச் செல்லவில்லை என்று பிழையுடையதாக கருதி இறுதி அறிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எ.ம.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் எ.ம.சா.ஆ. 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து நடுரோட்டில் நடந்ததாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு எதிரில் தான் தமிழரசன் வீடு உள்ளது என்றால் சரிதான்.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள உதயா என்பவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. உதயாவை விசாரித்தால் தான் யார் டிராக்டரை ஓட்டி சென்றார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். உதயாவை விசாரிக்காததால் இறுதி அறிக்கை உண்மையாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஓம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி, திருப்பத்தூர்.